## பாடம் - 6. மலையும் எதிரொலியும்

பாடம்: தமிழ்

வகுப்பு: 4

### அ. வினாக்களுக்கு விடையளிக்க

**1. தந்தையும் மகனும் எங்குச் சென்று கொண்டிருந்தனர்?**

தந்தையும் மகனும் மலைப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

**2. சிறுவன் பேசியபோது மலை என்ன செய்தது?**

“யார் நீ” என்று கேட்டது, பிறகு “உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது” என்று கூறியது.

**3. சிறுவன் “நான் அன்பு கொண்டவன்” என்று சொல்லியிருந்தால் மலை என்ன சொல்லி இருக்கும்?**

சிறுவன் “நான் அன்பு கொண்டவன்” என்று சொல்லியிருந்தால் மலையும் “நான் அன்பு கொண்டவன்” என்று சொல்லியிருக்கும்.

**4.இக்கதையின் மூலம் தந்தை மகனுக்குக் கூறிய அறிவுரை யாது?**

“நீ மற்றவர்களிடம் அதிகமான திறமையை எதிர்பார்த்தால் முதலில் உன்னுடைய திறமையை அதிகரித்து கொள்”.

“நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையே வாழ்க்கையும் நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது”.

உன்னுடைய வாழ்க்கை எதிர்பாராமல் நடக்கும் ஒன்றன்று, அது உன்னுடைய எதிரொலிதான் என்று தந்தை மகனுக்கு அறிவுரை கூறினார்.

### ஆ. விடுகதைக்குரிய சரியான படத்தைத் தேர்ந்தெடுப்போமா?

1. வட்டமாய் இருந்திடுவேன் உண்ணுவதற்கே என்னை வாங்குவர். ஆனால் என்னை யாரும் உண்ணுவதில்லை . நான் யார்? தட்டு





2. உயரமாய் இருந்திடுவேன்; பச்சை ஆடை உடுத்தியிருப்பேன்; குளிர்ச்சியான தண்ணீரைக் கொட்டுவேன். நான் யார்? மலை





3. நீல நிறமாய்த்தோன்றிடுவேன். ஓயாமல் அலைந்திடுவேன். தவழ்ந்து தவழ்ந்து வந்திடுவேன். நான் யார்? கடல்





4. நீ பார்த்தால் நானும் பார்ப்பேன். நீ சிரித்தால் நானும் சிரிப்பேன். நீ செய்தால் நானும் செய்வேன். நான் யார்? **கண்ணாடி**

  

5. தரையிலே ஊர்ந்திடுவேன். வானத்திலே பறந்திடுவேன். கடலைத் தாண்டிடுவேன். மக்களைச் சுமந்து செல்வேன். நான் யார்? **விமானம்**

  

## மொழியோடு விளையாடு

### அ. குறிப்புகளைப் படி, விடையைக் கண்டுபிடி

1. மூன்றெழுத்துச் சொல்
   நடு எழுத்து எடுத்து விட்டால்
   படுக்கச் சொல்லும்
   காஞ்சிபுரம் இதனால் புகழ் பெறும்

   விடை: பட்டு

2. நான்கெழுத்துச் சொல்
   முதல் இரண்டு எழுத்து விடச் சொல்லும்
   கடை இரண்டு எழுத்து பாட்டி சொல்வார்
   முதலும் கடையும் வித்தாகும்.

   விடை: விடுகதை

3. ஐந்தெழுத்துச் சொல்
   முதல் இரண்டும் இனிக்கும்
   கடைசி மூன்றும் பறக்கும்
   முதலும் கடையும் தேடும்
   அது என்ன?

   விடை: தேன்சிட்டு

### ஆ. கீழ்க்காணும் தொடர்களில் எழுவாயைக் கண்டறிந்து வட்டமிடுக.

1. குழந்தை சிரித்தது.
2. கண்ணன் படம் வரைந்தான்.
3. பூங்கோதை பள்ளி சென்றாள் .
4. அண்ணன் தம்பிக்கு உதவினான்.
5. பறவைகள் வானில் பறந்தன.
6. பசு புல் மேய்ந்தது.

AKSHAYA ACADEMY MATRIC Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

**இ. கீழ்க்காணும் தொடர்களைப் பயனிலைகளுக்கேற்றவாறு அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| 1. அவர் சிறந்த மருத்துவர். | பெயர்ப் பயனிலை |
| 2. என்னை அழைத்தவர் யார்? | வினாப் பயனிலை |
| 3. அருளரசன் நல்ல மாணவன். | பெயர்ப் பயனிலை |
| 4. நேற்று அழகன் ஊருக்குச் சென்றான். | பெயர்ப் பயனிலை |
| 5. முக்கனிகள் யாவை? | வினாப் பயனிலை |
| 6. புலி உறுமியது. | பெயர்ப் பயனிலை |

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL
KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER